2019–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 4–ஆம் தேதி (04.02.2019) திங்கட் கிழமை காலை 10.30 மணிக்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களால் நடத்தப்பட்ட கூட்ட நடவடிக்கைகள்.

1. இம்மாநகராட்சிப் பணியாளர்களின் சிறப்பு சேமநலநிதிக்கான பாரத மாநில வங்கிக் கணக்கில் நிதி இருப்பு குறைவாக உள்ளதாலும், ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு சிறப்பு சேமநலநிதி மற்றும் அதற்கான வட்டித் தொகைகள் வழங்க வேண்டியுள்ளதாலும் ரூ.10,00,000/. (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) வருவாய் நிதிக் கணக்கிலிருந்து சிறப்பு சேமநல நிதி கணக்குத் தலைப்பு வங்கிக் கணக்கிற்கு நிதி மாறுதல் செய்வதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

   அலுவலகக்குறிப்பு

   அனுமதிக்கலாம் (பி2/22248/2006)

   229. அனுமதிக்கப்பட்டது.

2. ஈரோடு மாநகராட்சி பொதுப்பிரிவில் வகுப்பு-II பணியிடத்தில் பணிபுரிந்து வந்த நிர்வாக அலுவலர் திரு.ப.மாரிமுத்து அவர்கள் உதவி ஆணையர் (பணியாளர்) மற்றும் கணக்கு அலுவலர் பணியிடத்தில் பணிபுரிந்து வந்த திரு.சோ.குமரேசன் அவர்கள் உதவி ஆணையர் (கணக்கு)-ஆக வகுப்பு-I அலுவலர் பணியிடத்தில் பதவி உயர்வு பெற்றதைத் தொடர்ந்து மேற்படி பணியிடங்கள் 25.01.2019 முதல் காலியாக உள்ளது.

காலியாக உள்ள நிருவாக அலுவலர் பணியிடத்திற்கு பதவி உயர்வு வழங்கக்கோரி செல்வி.பா.ஹேமலதா, கண்காணிப்பாளர் என்பவரும், காலியாக உள்ள கணக்கு அலுவலர் பணியிடத்திற்கு பதவி உயர்வு வழங்கக்கோரி திரு.கே.குமரேசன், கண்காணிப்பாளர் (தற்போது உதவி வருவாய் அலுவலர்) என்பவரும் விண்ணப்பித்துள்ளார்கள்.

ஈரோடு மாநகராட்சியின் நிருவாக நலன் கருதி, எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல் பணிகள், நடைமுறையில் இருக்கும் சொத்துவரி சீராய்வுப் பணிகள், எதிர்வரும் உள்ளாட்சித் தேர்தல் பணிகள், ஸ்மார்ட் சிட்டி பணிகள் ஆகிவற்றிற்க்குத் தனியே பணி நியமனம் இல்லாத சூழ்நிலையில் காலியாகவுள்ள நிருவாக அலுவலர், கணக்கு அலுவலர் பணியிடங்களைப் பூர்த்தி செய்வது மிக அவசியமாகும். தற்போதைய நிலையில் மேற்படி அலுவலர்கள் கண்காணிப்பாளர் மற்றும் கண்காணிப்பாளர்(தற்போது உதவி வருவாய் அலுவலர்) பணியிடத்தில் இரண்டாண்டுகள் பணியை முடித்துள்ளதாலும், இவர்கள் மீது

குற்றச்சாட்டுகள் ஏதும் நிலுவையில் இல்லாததால் மேற்படி பணியிடங்களைப் பதவி உயர்வு மூலம் பூர்த்தி செய்ய ஆணையாளர் அவர்கள் தனது 01.02.2019ம் தேதிய குறிப்பில் தெரிவித்துள்ளார்கள்.

காலியாக உள்ள வகுப்பு-II வகை-3 பணியிடமான நிருவாக அலுவலர் மற்றும் வகுப்பு-II வகை-4 பணியிடமான கணக்கு அலுவலர் பணியிடங்களை கீழ்க்குறிப்பிட்டுள்ளவாறு நிரப்பப்பட வேண்டும்.

தமிழ்நாடு மாநகராட்சி பொதுப்பணி விதிகள், 1996ல் அரசாணை (நிலை) எண்.179, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந.4) துறை, நாள்.05.10.2009ல் வெளியிடப்பட்ட திருத்தங்களின்படி வகுப்பு-II வகை-3ல் உள்ள நிருவாக அலுவலர் மற்றும் வகுப்பு-II வகை-4ல் உள்ள கணக்கு அலுவலர் பணியிடங்களை பூர்த்தி செய்ய கீழ்க்கண்ட தகுதிகள் மற்றும் நியமன முறை வரையறுக்கப்பட்டுள்ளன.

Name of the Post	Method of Recruitment (Rule-3)	Qualification (Rule-4)
Administrative Officer	By promotion from the holder of the posts of Superintendent Or Assistant Revenue Officer in the Tamil Nadu Municipal Corporation General Subordinate Service.	By promotion – "Must have worked for a period of not less than two years in the post of Superintendent or Assistant Revenue Officer".
Accounts Officer	By promotion from the holder of the posts of Superintendent Or Assistant Revenue Officer of the Corporation General Subordinate Service.	By promotion – "Must have worked for a period of not less than 2 years in the post of Superintendent Or Assistant Revenue Officer".
Rule 3A	Appointment to the post of Administrative Officer and Accounts Officer. "By promotion, shall be made from the panel drawn from the common seniority list of Superintendent and Assistant Revenue Officer.	

1981ம் வருடத்திய கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டம் பிரிவு எண்.106ன் உபபிரிவு எண்.2(பி)-ல் Every Appointment to any Post included in class to shall be made by the council and shall be subject to confirmation by the Government என வரையறை செய்யப்பட்டுள்ளது.

கண்காணிப்பாளர் மற்றும் உதவி வருவாய் அலுவலர் பணியிடத்திற்கான 2018-2019ம் ஆண்டிற்கான இறுதி பணிமூப்பு பட்டியலில் வரிசை எண்.1ல் திருமதி.இரா.விஜயா, உதவி வருவாய் அலுவலர் என்பவர், தேர்ந்தோர் பட்டியல்படி பதவி உயர்வு பெற்றுவிட்டார். மேற்படி இறுதி பணிமூப்பு பட்டியலில் வரிசை எண்.2 உள்ள செல்வி.பா.ஹேமலதா, கண்காணிப்பாளர் என்பவர் கண்காணிப்பாளராக 08.08.2016 முதல் நாளது தேதிவரை தொடர்ந்து பணிபுரிந்து 07.08.2018 பிற்பகல் இரண்டாண்டுகள் பணிபூர்த்தி செய்துள்ளார். திரு.கே.குமரேசன் என்பவர் 20.09.2016 முதல் 14.05.2018 முடிய கண்காணிப்பாளராகவும், 15.05.2018 முதல் உதவி வருவாய் அலுவலராகவும் தொடர்ந்து பணிபுரிந்து 19.09.2018 பிற்பகல் இரண்டாண்டுகள் பணிபூர்த்தி செய்துள்ளார்.

எனவே, 2018-2019ம் ஆண்டிற்கு ஏற்கனவே வெளியிடப்பட்ட தேர்ந்தோர் பட்டியலில் செல்வி.பா.ஹேமலதா, கண்காணிப்பாளர் மற்றும் திரு.கே.குமரேசன், கண்காணிப்பாளர் (தற்போது உதவி வருவாய் அலுவலர்) ஆகியோர் பெயர் இடம்பெறவில்லை. தற்போது மேற்படி பணியாளர்கள் முறையே 07.08.2018 மற்றும் 19.09.2018 ஆகிய தேதிகளில் மேற்படி பணியிடங்களில் இரண்டாண்டுகள் பணிக்காலத்தை பூர்த்தி செய்துள்ளார்கள்.

2018-2019ம் ஆண்டிற்கான தேர்ந்தோர் பட்டியல் மற்றும் முதுநிலைப் பட்டியல் வெளியிடுவதற்கென வரையறுக்கப்பட்ட தேதி (Crucial Date) 01.04.2018 ஆகும். பதவி உயர்வு கோரும் தனியர்கள் 01.04.2018 அன்று பணிவிதிகளின்படி தகுதி பெறாமல் இருந்தாலும், நாளது தேதியில் பணிவிதிகளின்படி ஊட்டுப்பணியிடத்தில் இரண்டாண்டுகள் பணிக்காலத்தை முடித்துள்ளார்கள். எனவே, தற்காலிக தேர்ந்தோர் பட்டியல் வெளியிட நடவடிக்கை மேற்கொண்டமைக்கும், தற்காலிக தேர்ந்தோர் பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

தற்காலிக தேர்ந்தோர் பட்டியலில் வரிசை எண்.1ல் உள்ள செல்வி.பா.ஹேமலதா, கண்காணிப்பாளர் என்பவரை வகுப்பு-II வகை-3ன்கீழ் நிருவாக அலுவலராகப் பதவி உயர்வு செய்யவும், வரிசை எண்.2ல் உள்ள திரு.கே.குமரேசன், கண்காணிப்பாளர் (தற்போது உதவி வருவாய் அலுவலர்) என்பவரை வகுப்பு-II வகை-4ன்கீழ் கணக்கு அலுவலராக பதவி உயர்வு வழங்கவும் அரசின் உறுதியாக்கம் பெற நகராட்சி நிர்வாக ஆணையர் வழியாக அரசுக்கு கருத்துரு அனுப்ப தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் கூட்டத்திற்கு (மாமன்றம்) பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :-

1. ஈரோடு மாநகராட்சியின் நிருவாக நலன் கருதி, எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல் பணிகள், நடைமுறையில் இருக்கும் சொத்துவரி சீராய்வுப் பணிகள், எதிர்வரும் உள்ளாட்சித் தேர்தல் பணிகள், ஸ்மார்ட் சிட்டி பணிகள் ஆகிவற்றிற்குத்

தனியே பணி நியமனம் இல்லாத சூழ்நிலையில் காலியாகவுள்ள நிருவாக அலுவலர், கணக்கு அலுவலர் பணியிடங்களைப் பூர்த்தி செய்வது மிகவும் அவசியமாகிறது. எனவே, 2018-2019ம் ஆண்டு இறுதி பணிமூப்பு பட்டியலில் வரிசை எண்.2ல் உள்ள செல்வி.பா.ஹேமலதா என்பவர் கண்காணிப்பாளராக 08.08.2016 முதல் தொடர்ந்து பணிபுரிந்து 07.08.2018 பிற்பகல் இரண்டாண்டுகள் பணியை பூர்த்தி செய்துள்ளார். இறுதி பணிமூப்பு பட்டியலில் வரிசை எண்.3ல் உள்ள திரு.கே.குமரேசன் என்பவர் கண்காணிப்பாளர் (தற்போது உதவி வருவாய் அலுவலர்) 20.09.2016 முதல் பணிபுரிந்து 19.09.2018 பிற்பகல் இரண்டாண்டுகள் பணியை பூர்த்தி செய்துள்ளார். நாளது தேதியில் மேற்படி பணியாளர்கள் பணிவிதிகளின்படி ஊட்டுப்பணியிடத்தில் இரண்டாண்டுகள் பணிக்காலத்தை முடித்துள்ளார்கள். எனவே, அத்தியாவசிய தேவையைக் கருதி 2019-2020ம் ஆண்டுக்கு தற்காலிக தேர்ந்தோர் பட்டியல் வெளியிடப்பட்டமைக்கு அனுமதிக்கலாம்.

2. தற்காலிக தேர்ந்தோர் பட்டியலில் உள்ள பணியாளர்கள் மீது குற்றச்சாட்டுக்கள் ஏதும் நிலுவையில் இல்லாததாலும், இவர்களை ஆணையாளர் அவர்களின் உத்தரவுப்படி வரிசை எண்.1ல் உள்ள செல்வி.பா.ஹேமலதா, கண்காணிப்பாளர் என்பவரை நிருவாக அலுவலராகப் பதவி உயர்வு செய்யவும், வரிசை எண்.2ல் உள்ள திரு.கே.குமரேசன், கண்காணிப்பாளர் (தற்போது உதவி வருவாய் அலுவலர்) என்பவரை கணக்கு அலுவலராக பதவி உயர்வு செய்யவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

3. மேற்படி செல்வி.பா.ஹேமலதா, கண்காணிப்பாளர் என்பவரை நிர்வாக அலுவலராகவும், திரு.கே.குமரேசன், கண்காணிப்பாளர் (தற்போது உதவி வருவாய் அலுவலர்) என்பவரை கணக்கு அலுவலராகவும், பதவி உயர்வு செய்ததற்கு அரசின் உறுதியாக்கம் பெற நகராட்சி நிர்வாக ஆணையர் வழியாக அரசுக்கு கருத்துரு அனுப்ப தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் (மாமன்றம்) அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.350/2019/சி1.

230. அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

3. ஈரோடு மாநகராட்சி மண்டலம்-1-க்குட்பட்ட செயலாளர், A.A 184, வீரப்பன்சத்திரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் லிட், 44, சத்தி மெயின் ரோடு, வீரப்பன்சத்திரம், சத்தி ரோட்டில் அமைந்துள்ள கட்டிடத்திற்கு அரசாணை எண். 92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்: 03.07.2007-ன்படி மாத வாடகை கீழ்வருமாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

1.	கடை உரிமதாரர் பெயர்	செயலாளர், வீரப்பன்சத்திரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி, வீரப்பன்சத்திரம், சத்தி ரோடு, ஈரோடு.
2.	வரிவிதிப்பு எண்.	056/2
3.	தளத்தின் விவரம்	தரைத் தளம்
4.	கடையின் அளவு	219.24 ச.அடி. (ஒரு கடையின் அளவு) 6 கடைகள்
5.	31.03.2018 அன்று வாடகை (ரூ.60365/6= ரூ.10060/12=ரூ.838) (ரூ.838x6=ரூ5028)	ரூ.60365- (6 கடைகளுக்கு) ஒரு மாத வாடகை 6 கடைகளுக்கு =ரூ5028
6.	பொதுப்பணித் துறை ரேட் 1 ச.அடிக்கு	ரூ.10.22
7.	மாத வாடகை	ஒரு கடைக்கு 219.24 ச.அடி. x ரூ.10.22 = ரூ. 2240.48- (or) ரூ.2241.00
8.	6 கடைகளுக்கு ஒரு மாதத்திற்கு	ரூ. 2241 x 6 = ரூ. 13446.00

மேற்கண்டுள்ள மாநகராட்சி கட்டிடத்தில் அரசு துறை சார்ந்த நிறுவனமான செயலாளர், A.A 184, வீரப்பன்சத்திரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் லிமிடெட் இயங்கி வருவதால், பொதுப்பணித் துறை ரேட்டின்படி மேற்படி கடைகளுக்கு (ஒரு கடைக்கு ரூ. 2241- வீதம் 6 கடைகளுக்கு ரூ. 13446.00) மாத வாடகை ரூ. 13446-ஐ 01.04.2018 முதல் நிர்ணயம் செய்வதற்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

அவசர அவசியத்தை முன்னிட்டு மேற்படி கடைகளுக்கு 01.04.2018 முதல் மூன்றாண்டு தொகுப்பு காலத்திற்கு உரிமம் ஒப்படைக்கவும், ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று அலுவலக நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் அங்கீகாரம் வழங்கலாம்.

கோப்பு எண். அ1/525-ம1/2014

231. அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

4. ஈரோடு மாநகராட்சி மண்டலம்-3-க்குட்பட்ட திண்டல் போஸ்ட் ஆபீஸ் அமைந்துள்ள கட்டிடத்திற்கு அரசாணை எண். 92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்: 03.07.2007-ன்படி மாத வாடகை கீழ்வருமாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

1.	கடை உரிமதாரர் பெயர்	கண்காணிப்பாளர், போஸ்ட் ஆபீஸ்
2.	வரிவிதிப்பு எண்.	123125
3.	தளத்தின் விவரம்	தரைத் தளம்
4.	கடையின் அளவு	293 ச.அடி.
5.	31.03.2017 அன்று மாத வாடகை	ரூ.800-
6.	பொதுப்பணித் துறை ரேட் 1 ச.அடிக்கு	ரூ.9.00
7.	பொதுப்பணித் துறை ரேட்டின்படி மாத வாடகை	293 ச.அடி. x ரூ.9.00 = ரூ. 2637-
8.	கண்காணிப்பு குழு ரேட் 1 ச.அடிக்கு	ரூ.60.00
9.	கண்காணிப்பு குழு ரேட்டின்படி மாத வாடகை	293 ச.அடி. x ரூ.60.00 = ரூ. 17580-

மேற்கண்டுள்ள மாநகராட்சி கட்டிடத்தில் மத்திய அரசு அஞ்சலக துறை இயங்கி வருவதாலும், மேற்படி கட்டிடம் மெயின் சாலையிலிருந்து காம்பவுண்டுக்குள் 15 மீட்டர் தள்ளி உள்ளதாலும் பொதுப்பணித் துறை ரேட்டின்படி மாத வாடகை ரூ. 2637-ஐ 01.04.2017 முதல் நிர்ணயம் செய்வதற்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

அவசர அவசியத்தை முன்னிட்டு மேற்படி கட்டிடத்திற்கு 01.04.2017 முதல் மூன்றாண்டு தொகுப்பு காலத்திற்கு உரிமம் ஒப்படைக்கவும், ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று அலுவலக நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் அங்கீகாரம் வழங்கலாம்.

கோப்பு எண். அ1/1841–ம3/2018

232. அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

2019–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 13–ஆம் தேதி (13.02.2019) புதன் கிழமை காலை 10.30 மணிக்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களால் நடத்தப்பட்ட கூட்ட நடவடிக்கைகள்.

1. ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள கீழ்க்கண்டுள்ள 31.03.2019 உடன் உரிம காலம் முடிவடையும் குத்தகை இனங்களுக்கு 01.04.2019 முதல் 31.03.2022 முடிய மூன்றாண்டு காலத்திற்கு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி 07.02.2019 அன்று நடைபெற்றது. மேற்படி ஏலத்தில் கலந்து கொண்டு கீழ்க்கண்டவாறு உச்ச ஏலக் கேள்வித் தொகை கோரியுள்ளார்கள்.

வ. எண்.	ஏல இனம்	உச்ச ஏலக் கேள்வி கோரியவர் திருவாளர்கள்.	உச்ச ஏலக் கேள்வித் தொகை
1.	மண்டலம்-2 மாணிக்கம்பாளையம் அருகில் நடைபெறும் வாரச்சந்தையில் கட்டணம் வசூலிக்கும் உரிமம்	கே. அருண்பிரசாத்	ரூ.1,66,800-
2.	நேதாஜி சாலையில் உள்ள ஹெமிங்வே வாரச்சந்தை, தங்கபெருமாள் வீதி மற்றும் நீல்கிரீஸ் சந்து பகுதியில் வாரச்சந்தை மற்றும் பெரியார் நகரில் உள்ள வாரச்சந்தைகளில் கட்டணம் வசூலிக்கும் உரிமம்.	கே.ஆர். ஸ்ரீதரன்	ரூ.1,18,100-
3.	ஈரோடு மாநகராட்சி பேருந்து நிலையத்தில் பேருந்து புறப்படும் நேரம் மற்றும் விளம்பரங்களை தொலைக்காட்சி பெட்டி வைத்து விளம்பரம் செய்யும் உரிமம்	வி. சங்கர்	ரூ.8,11,000-
4.	பேருந்து நிலையத்தில் உள்ள மாநகராட்சி தங்கும் விடுதியில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம்	ஏ. செல்வராஜ்	ரூ.4,17,600-
5.	பேருந்து நிலைய இரண்டாம் பிளாட்பாரத்தில் வடக்கு தெற்காக தூண் எண்.5-க்கும் 6-க்கும் இடையே உள்ள பிளாட்பாரம் காலியிடத்தில் 4'x4' அளவில் பூ வியாபாரம் செய்யும் உரிமம் (கடை எண்.1)	எம். பாலாஜி	ரூ.1,88,700-
6.	பேருந்து நிலைய மூன்றாம் பிளாட்பாரத்தில் வடக்கு தெற்காக தூண் எண்.12-க்கும் 13-க்கும் இடையே உள்ள பிளாட்பாரம் காலியிடத்தில் 4'x4' அளவில் பூ வியாபாரம் செய்யும் உரிமம் (கடை எண்.3)	ஆர்.எம். இஸ்மாயில்	ரூ.1,50,800-
7.	பேருந்து நிலைய மூன்றாம் பிளாட்பாரத்தில் வடக்கு தெற்காக தூண் எண்.16-க்கும் 17-க்கும் இடையே உள்ள பிளாட்பாரம் காலியிடத்தில் 4'x4' அளவில் பூ வியாபாரம் செய்யும் உரிமம் (கடை எண்.4)	பஷீர்	ரூ.1,61,600-
8.	பேருந்து நிலைய கிழக்குப்புற பிளாட்பாரம் எண்.6-ன் கட்டண கழிப்பிடம் அருகில் ஸ்டேர்கேசிலிருந்து தூண் எண்.3-க்கும் 4-க்கும் இடையில் 4'x4' அளவில் பூக்கடை வைத்து வியாபாரம் செய்யும் உரிமம் (கடை எண்.5)	எம். பிரபு	ரூ.1,52,000-
9.	பேருந்து நிலையத்தில் 2 மற்றும் 3-வது பிளாட்பாரங்களில் உள்ள கழிப்பிடங்களில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் (பெண்கள் மற்றும் ஆண்கள்)	எஸ். சண்முகசுந்தரம்	ரூ.8,00,700-
10.	பேருந்து நிலையத்திலுள்ள 5,6 மற்றும் 7-வது பிளாட்பாரங்களில் அமைந்துள்ள கழிப்பிடங்களில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் (பெண்கள் மற்றும் ஆண்கள்)	எஸ். அருள்குமார்	ரூ.4,40,800-
11.	மண்டலம்-I வார்டு எண். 8 சின்னவலசு	ஏ. செல்வராஜ்	ரூ.34,900-

	மாரியம்மன்கோவில் அருகில் உள்ள கட்டண கழிப்பிடத்திற்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம்		
12.	மண்டலம்-II பெரிய சேமூர் வார்டு எண்.17 கனிராவுத்தர் குளம் பகுதி கட்டண கழிப்பிடத்திற்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம்	ஏ. செல்வராஜ்	ரூ.45,500-
13.	பேருந்து நிலையத்திற்குள் வடபுறம் விசிடிவி சாலை பக்கவாட்டில் அமைந்துள்ள ஆட்டோ ஸ்டேண்டில் ஆட்டோக்களுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம்	எம். மணிகண்டன்	ரூ.62,000-
14.	பேருந்து நிலையத்திற்குள் வடபுறம் விசிடிவி சாலை பக்கவாட்டில் அமைந்துள்ள கார் ஸ்டேண்டில் கட்டணம் வசூலிக்கும் உரிமம்	ஏ. செல்வராஜ்	ரூ.43,000-
15.	காந்திஜி வீதியில் உள்ள மாநகராட்சி டாக்சி ஸ்டேண்டில், கட்டணம் வசூலிக்கும் உரிமம்	எம். ராஜமாணிக்கம்	ரூ.67,000-

மேற்கண்ட ஏல இனங்களுக்கு உச்ச ஏலக் கேள்வித் தொகை கோரியவர்களுக்கு 01.04.2019 முதல் மூன்றாண்டு காலத்திற்கு உரிமம் ஒப்படைக்க ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :-

மேற்படி வரிசை எண். 1 முதல் 15 வரையிலான ஏல இனங்களுக்கு ஏலதாரர்கள் கோரியுள்ள உச்ச ஏலக் கேள்வித் தொகைகள் சென்ற ஆண்டின் உரிமத் தொகையை விட கூடுதலாக உள்ளதால், ஏலதாரர்களுக்கு குத்தகையினங்களின் 01.04.2019 முதல் 31.03.2022 வரையான உரிமத்தை ஒப்படைக்க அனுமதி வழங்கலாம்.

(அ1/5131/2018)

233. அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

2. ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடிதம் ந.க.எண்.208/2017/எல்.5 நாள்:06.02.2019ம் தேதிய கடிதத்தில் பார்வை 2,3,4,5 – ல் ஈரோடு பன்னீர் செல்வம் பூங்காவில் மறைந்த தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் திருவுருவச் சிலையினை வைக்க ஈரோடு மாவட்ட காவல் கண்காணிப்பாளர், ஈரோடு மாநகராட்சி ஆணையாளர், ஈரோடு வருவாய் கோட்ட அலுவலர் மற்றும் நெடுஞ்சாலைத் துறை கோட்ட பொறியாளர் ஆகியோரால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. எனவும் மேலும் அரசாணை (பல்வகை) எண்:183 வருவாய்த்துறை, Land Disposal wing (LD(1)) நாள்:23.05.2017ல் பத்தி 8 (ii)ல் குறிப்பிட்டுள்ள எந்த பகுதியும் உட்படாத இடமாக இருப்பதால் ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டம், ஈரோடு நகரம், வார்டு எண்.சி, பிளாக் எண்.38, T.S.No.61 க்கு 0.0448.8 சதுர மீட்டர், T.S.No.62 க்கு 0.0271.4 சதுர மீட்டரில் அமைந்துள்ள பன்னீர் செல்வம் பூங்காவில் மறைந்த மாண்புமிகு தமிழக முதல்வர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் திருவுருவச் சிலையினை நிறுவுவதால், பொதுமக்கள் மற்றும் போக்குவரத்திற்கோ எவ்வகையிலும் இடையூறு இல்லை என்பதால் சிலை நிறுவ அரசாணை வேண்டி பரிந்துரை செய்துள்ளார்கள் எனவே மேற்படி சிலை நிறுவுவது தொடர்பாக அரசுக்கு அனுப்பப்பட்ட கருத்துருவுக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலகக் குறிப்பு:

அனுமதி வழங்கலாம். (இ2/4529/2017)

234. அனுமதிக்கப்பட்டது.

3. ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட கனிராவுத்தர் குளத்தை தூர் வாரி சுற்றிலும் கரை அமைத்தல், ஏரியின் கரையில் புல் கற்றைகளை வளர்த்து கரைகளை பலப்படுத்துதல், ஏரியை சுற்றி வேலி அமைத்தல், மரக் கன்று நடுதல், நடைபாதை அமைத்தல் மற்றும் இதர பணிகளை ரூ.5.95 கோடி மதிப்பீட்டில் KfW நிதியுதவியுடன் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு மேற்கொள்ள முதன்மைச் செயலர் மறறும் நிர்வாக இயக்குநர், TNUIFSL, சென்னை அவர்களின் கடிதம் எண்.PSGF/Projects/Erode/WBIP, நாள்.10.10.2018–ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன் விபரம் கீழ்வருமாறு.

1. **Amount of Grant** :Rs.4.16 Crores (Rupees Four Crores and Sixteen Lakhs only)
2. **Project** :Water Body Improvement Project
3. **Project Cost** :Rs.5.95 Crores
4. **Financing Plan** :

Sl. No.	Details	Amount (Rs. in Crores)	%
1	Term Loan from TNUDF under KfW assisted SMIF-TN-II-1 Programme	1.19	20%
2	Capital Grant from PSGF under KfW assisted SMIF-TN-II-1 Programme	4.16	70%
3	ULB Contribution	0.60	10%
	Total	**5.95**	**100%**

5. **Completion Period :**
The proposed Project should be completed within one year from the date of commencement of project

6. **Last date of withdrawal:**
Unless TNUIFSL otherwise agree in writing, the right to make withdrawals from the Grant shall cease on completion of three years from the date of acceptances of Grant terms & conditions.

7. **Special terms & conditions:**
   a) **Procurement Guideline:**
   The Corporation shall adhere to the provisions / guideline of the Tamil Nadu Transparency in Tenders Act, 1998 for procurement of works, goods and services. The Corporation shall obtain approval for contract packaging, bid documents, bid evaluation reports and other reports & documents as applicable from TNUIFSL.
   b) **Statement of Expenditure & Progress Report**
   The Corporation shall provide monthly Progress Reports and statement of Expenditure (SoE) during implementation in the format prescribed by TNUIFSL.
   c) **Environmental & Social**

The Corporation shall implement the Project according to the Environmental, Climate Change and Social Management Framework (ECSMF) prescribed by TNUIFSL.

மேற்கண்ட நிதி ஆதாரங்களின் படியும், நிபந்தனைகளுக்குட்பட்டும், கனிராவுத்தர் குளத்தை தூர் வாரி சுற்றிலும் கரை அமைத்தல், ஏரியின் கரையில் புல் கற்றைகளை வளர்த்து கரைகளை பலப்படுத்துதல், ஏரியை சுற்றி வேலி அமைத்தல், மரக் கன்று நடுதல், நடைபாதை அமைத்தல் மற்றும் இதர பணிகளை ரூ.5.95 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:–

ஒப்புதல் வழங்கலாம். கோப்பு எண்.இ1/0606/2018

235. ஒப்புதல் அளிக்கப்பட்டது.

4. ஈரோடு மாநகராட்சி மண்டலம் –3க்குட்பட்ட வார்டு எண். 31, மனுதாரர் திரு.கே.கோபால் மற்றும் 12 பேர்கள், திண்டல் கிராமம் புதிய ரீ.ச.எண். 21/1,21/2A1,21/2B1,21/2C1 -இல் அமைந்துள்ள மனைகளுக்கு அணுகு சாலையாக உள்ள சாலையினை உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்க கடிதம் வழங்கியுள்ளார்கள்.

எனவே, மேற்கண்ட இடம் நேராய்வு செய்யப்பட்டது. பெருந்துறை மெயின் சாலையிலிருந்து வடபுறமாக பிரிந்து செல்லும் தென்வடல் சாலை ஈரோடு பதிவு மாவட்டம், ஈரோடு சார் பதிவு மாவட்டம், ஈரோடு வருவாய் மாவட்டம், ஈரோடு வருவாய் வட்டம், முன்பு 76 திண்டல் வருவாய் கிராமம், தற்போது 33 திண்டல் வருவாய் கிராமம், பழைய க.ச.55, நெ.பு. ஏ. 8.94 க்கு தீர்வை ரூ.12.25 , க.ச..56, நெ.பு.ஏ. 2.51 க்கு தீர்வை ரூ. 3.41 இவைகளுக்கு புதிய ரீ.ச.எண்கள். 21/1,21/2A1,21/2B1,21/2C1 நெ. காலை லேட் நாகமாணிக்கம் வகையராவுக்கு பாத்தியப்பட்ட பூமியையும் சேர்த்து பு.ஏ. 2.84 விஸ்தீரண பூமியில், வீட்டு மனையிடங்களாக பிரிவினை செய்துள்ளதில், கிழமேலாக செல்லும் ஈரோடு – பெருந்துறை மெயின் ரோட்டிலிருந்து எங்களில் 1 முதல் 13 வரை இலக்கமிட்டவர்களுக்கும், வேறு நபர்களுக்கும் பாத்தியப்பட்ட கிரயச் சொத்துக்களின் மத்தியில் 30 அடி அகலத்தில் தென்வடலாக விடப்பட்டுள்ள மனைப்பிரிவு சாலைக்கு செக்குபந்தி விபரம் :

ஈரோடு – பெருந்துறை மெயின் ரோட்டிற்கும் – வடக்கு, வேறு நபர் சொத்துக்கும் – தெற்கு, மனை எண்கள் . 1,3,4,5,8 மற்றும் வேறு நபர் சொத்துக்களுக்கும் –கிழக்கு, மனை எண்கள் 9,10,11,12,13 மற்றும் வேறு நபர் சொத்துக்களுக்கும் – மேற்கு, இவைகளின் மத்தியில் வடபுரம் கிழமேலடி 30', தென்புரம் கிழமேலடி 30',கிழபுரம் தென்வடலடி 546 '3", மேல்புரம் தென்வடலடி 563' இந்த வகை அளவுகளுள்ள 16640 சதுரடி விஸ்தீரணமுள்ள 30 அடி தானசாசனத்திற்கு கட்டுப்பட்டதாகும்.

மேற்கண்ட சாலை இடம் ஈரோடு மாநகராட்சிக்கு 31/01/2019 அன்று சம்மந்தப்பட்ட சார்பதிவாளர் அலுவலகத்தில் தான சாசனம் பத்திர எண். 619 / 2019 பத்திரம் மூலம் பதிவு செய்யப்பட்டு ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அவர்களுக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டள்ளது. எனவே ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ள சாலைகளை ஈரோடு மாநகராட்சி வசம் எடுத்துக் கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம். கோப்பு எண். இ1/41/2019

236. அனுமதிக்கப்பட்டது.

5. ஈரோடு மாநகராட்சி மண்டலம் –3க்குட்பட்ட வார்டு எண். 33, மனுதாரர் திருமதி. கே.சரோஜினி மற்றும் 14 பேர்கள், திண்டல் கிராமம் பழைய க.ச.எண். 83A, ரீ.ச.எண். 27/1A,2,7 மற்றும் 28/1 (புதிய சர்வே எண். 27/15, 28/1A, 226/2, 226-3A) -இல் அமைந்துள்ள மனைகளுக்கு அணுகு சாலையாக உள்ள சாலையினை உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்க கடிதம் வழங்கியுள்ளார்கள்.

எனவே, மேற்கண்ட இடம் நேராய்வு செய்யப்பட்டது. ஈரோடு மாநகராட்சி மண்டலம்–3க்குட்பட்ட வார்டு எண். 33 சக்தி நகர் மெயின்சாலையிலிருந்து கிழக்காக பிரிந்து செல்லும் கிழமேலடி சாலைக்கு ஈரோடு மாவட்டம், ஈரோடு ரிடி, ஈரோடு சப்டி, ஈரோடு தாலூக்கா, முன்பு 76 திண்டல் கிராமம், தற்போது 33 திண்டல் கிராமம், பழைய க.ச. 83A, ரீ.சர்வே எண். 27/1A,2,7 மற்றும் 28/1 ஆகிய காலைகளில் (புதிய சர்வே எண். 27/15, 28/1A, 226/2, 226-3A) நெ. காலைகளுக்கு பாத்தியப்பட்ட விஸ்தீரண நிலத்தில் நிலையில் உள்ள சக்தி நகர் லே–அவுட் மெயின் ரோட்டை இணைக்கும்படியாக 30 அடி அகலத்தில் கிழமேலாக ரோடு ஏற்படுத்தப்பட்டு மேற்படி ரோட்டிற்கு வடபுறமும், தென்புறமும் உள்ள வீட்டுமனையிடங்களை நாங்கள் அனைவரும் கிரயம் பெற்ற வகையில் மேற்படி லே–அவுட்டின் கிரயதாரர்களாகிய எங்களுக்கு பொதுவாக பாத்தியப்பட்ட இதனடியில் விவரிக்கப்பட்டுள்ள 30 அடி அகல கிழமேல் மனைப்பிரிவு சாலைக்கு செக்குப்பந்தி விபரம்.

40 அடி அகல தென்வடல் சக்தி நகர் லே–அவுட் மெயின் ரோட்டிற்கும் கிழக்கு , ரீ.சர்வே எண். 164–க்கும் மேற்கு, சர்வே எண். 27/16, 28/1B, 28-1C1, 28/1C2, 28/1C3 ஆகிய காலைகளில் கிரயதாரர்களுக்கு பாத்தியப்பட்ட வீட்டுமனையிடங்களுக்கும் வடக்கு, சர்வே எண். 27/14B, 27/14C,27/12 மற்றும் ரீ.சர்வே எண். 226/1, 226/3A, 226/3B ஆகிய காலைகளில் கிரயதாரர்களுக்கு பாத்தியப்பட்ட வீட்டுமனையிடங்களுக்கும் தெற்கு, இதன்மத்தியில் வடபுறம் கிழமேல் மீட்டர் 239.2, தென்புறம் கிழமேல் மீட்டர் 236.6, கிழபுறம் தென்வடல் மீட்டர் 9.2, மேல்புறம் தென்வடல் மீட்டர் 9.4, இந்தவகை அளவுள்ள (0.54 செண்ட்) 23790 ச.அடி கொண்ட 30 அடி அகல கிழமேல் மனைப்பிரிவு சாலை பூராவும் சகிதம்.

மேற்கண்ட சாலை இடம் ஈரோடு மாநகராட்சிக்கு 30/01/2019 அன்று சம்மந்தப்பட்ட சார்பதிவாளர் அலுவலகத்தில் தான சாசனம் பத்திர எண். 569 / 2019 பத்திரம் மூலம் பதிவு செய்யப்பட்டு ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அவர்களுக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டள்ளது. எனவே ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ள சாலைகளை ஈஈரோடு மாநகராட்சி வசம் எடுத்துக் கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம். கோப்பு எண். இ1/54/2018

237. அனுமதிக்கப்பட்டது.

2019–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 15–ஆம் தேதி (15.02.2019) வெள்ளிக் கிழமை மாலை 05.00 மணிக்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களால் நடத்தப்பட்ட கூட்ட நடவடிக்கைகள்.

1. மாண்புமிகு ஈரோடு மேற்கு தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் அவர்கள் ஈரோடு மாநகராட்சிக்குச் சொந்தமான பன்னீர் செல்வம் பூங்கா வளாகத்தில் முன்னாள் தமிழக முதலமைச்சர் டாக்டர்.ஜெ.ஜெயலலிதா அவர்களுக்கு திருவுருவச்சிலை அமைக்க கோரியுள்ளார். ஈரோடு மாநகராட்சி பன்னீர் செல்வம் பூங்கா வளாகம் ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டம், ஈரோடு நகரம் வார்டு எண். சி பிளாக் எண்.38 T.S.No.61–க்கு 0.0448.8 சதுர மீட்டர் மற்றும்T.S.No.62–க்கு 0.0271.4 சதுர மீட்டர் பரப்பளவு கொண்டது. மேற்படி வளாகத்தில் பொது மக்கள் மேற்படி இடத்திற்கு வந்து செல்லும் வகையிலும் பூங்கா வளாகத்திற்கு எவ்வித இடையூறும் இல்லாத வகையிலும் பூங்காவின் கிழக்கு புறம் 1020 சதுர அடி பரப்பளவு உள்ள இடத்தில் திருவுருவச்சிலை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும் மேற்படி பன்னீர் செல்வம் பூங்கா வளாகத்தில் உள்ள காலியிடத்தில் சிலை அமைப்பதற்கு நிலம் ஒதுக்கீடு செய்ய உள்ளதால் பூங்கா என நில வகைப்பாடு செய்யப்பட்டுள்ள நகரளவு வார்டு எண்.சி பிளாக் எண்.38 T.S.No.61 மற்றும்T.S.No.62 நிலத்தின் கிழக்கு பகுதியில் உள்ள 1020 சதுர அடி நிலத்தினை வகைபாடு நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. அவ்வாறு வகைபாடு நீக்கம் செய்யப்பட்ட இடத்தில் முன்னாள் தமிழக முதலமைச்சர் டாக்டர்.ஜெ.ஜெயலலிதா அவர்களுக்கு திருவுருவச்சிலை அமைக்கலாம்.

அரசாணை நிலை எண்.221 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கு துறை (MA5) துறை நாள்.20.11.1998, அரசாணை நிலை எண்.183 வருவாய் துறை (LD4(1)) நாள்.23.05.2017 மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர், ஈரோடு அவர்களின் கடிதம் ந.க.எண்.208/2017/L5 நாள்.06.02.2019-ம் தேதிய கடிதத்திற்கு மேற்படி இடத்தில் மாண்புமிகு முன்னாள் தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர்.ஜெ.ஜெயலலிதா அவர்களின் திருவுருவச் சிலையினை அரசின் அனுமதி பெற்று நிறுவிக் கொள்ள மாமன்றத் தீர்மான எண்.234 நாள்.13.02.2019–இல் அனுமதி பெறப்பட்டுள்ளது.

எனவே பூங்கா என உள்ள பன்னீர்செல்வம் பூங்கா நகரளவு வார்டு எண்.சி பிளாக் எண்.38 T.S.No.61–க்கு 0.0448.8 சதுர மீட்டர் மற்றும்T.S.No.62–க்கு 0.0271.4 சதுர மீட்டர் பரப்பளவு இடத்தின் கிழக்கு பகுதியில் 85 அடி நீளமும் 12 அடி அகலமும் உள்ள 1020 சதுர அடி பரப்பளவு கொண்ட நிலத்தினை மட்டும் பூங்கா (Park) என நிலவகைப்பாடு உள்ளதை தற்பொழுது படிப்பகம் மற்றும் அதன் பீடத்தில் தலைவர்கள் சிலை உள்ளது. எனவே அறிவிக்கப்பட்ட பூங்கா என்ற இடத்தை நில உபயோக மாற்றம் செய்து, (Denotified from the park site) மேற்படி இடத்தினை சிலை அமைப்பதற்கு ஒதுக்கீடு செய்து அறிவிக்கை செய்ய மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:–

1. மாநகராட்சிக்கு சொந்தமான பன்னீர் செல்வம் பூங்கா நகரளவு வார்டு எண்.சி பிளாக் எண்.38 T.S.No.61–க்கு 0.0448.8 சதுர மீட்டர் மற்றும்T.S.No.62–க்கு 0.0271.4 சதுர மீட்டர் பரப்பளவு இடத்தின் கிழக்கு பகுதியில் 85 அடி நீளமும் 12 அடி அகலமும் உள்ள 1020 சதுர அடி நிலத்தினை மட்டும் பூங்கா (Park) என நில வகைப்பாடு உள்ளதை தற்பொழுது படிப்பகம் மற்றும் அதன் பீடத்தில் தலைவர்கள் சிலை உள்ளது. எனவே அறிவிக்கப்பட்ட பூங்கா என்ற இடத்தை நில உபயோக மாற்றம் செய்து, (Denotified from the park site) மேற்படி இடத்தினை சிலை அமைப்பதற்கு ஒதுக்கீடு செய்து அறிவிக்கை செய்ய மன்றம் அனுமதி வழங்கலாம்.

2 மேற்படி பன்னீர்செல்வம் பூங்கா நகரளவு வார்டு எண்.சி பிளாக் எண்.38 T.S.No.61–க்கு 0.0448.8 சதுர மீட்டர் மற்றும்T.S.No.62–க்கு 0.0271.4 சதுர மீட்டர் பரப்பளவு இடத்தின் கிழக்கு பகுதியில் 85 அடி நீளமும் 12 அடி அகலமும் உள்ள 1020 சதுர அடி நிலத்தினை மட்டும் சிலை அமைப்பதற்காக மாற்றி அமைத்து அறிவிக்கை செய்யப்பட்ட நடவடிக்கையின்படி வருவாய் துறை ஆவணங்களில் திருத்தம் செய்து கொள்ள மாவட்ட வருவாய் துறையினருக்கு தெரிவிக்கும் நடவடிக்கைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

3 மேற்படி இடத்தில் சிலை அமைக்க அனுமதி வழங்கலாம்.

(E2/4529/2017)

238. அனுமதிக்கப்பட்டது.

2. ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பேருந்து நிலைய வணிக வளாக முதல் தளம் பிளாக் ஏ கடைக்கு ஒப்படைக்கும் காலம் முதல் மூன்றாண்டு காலத்திற்கு 25.01.2019 மற்றும் 07.02.2019 ஆகிய தேதிகளில் பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது. மேற்கண்ட தேதிகளில் நடைபெற்ற முதல் மற்றும் இரண்டாவது ஏலத்தில் வைப்புத் தொகை செலுத்தி கலந்து கொள்ள ஒருவரும் முன்வரவில்லை. எனவே மேற்படி ஏல இனத்திற்கு மூன்றாவது முறையாக 15.02.2019 அன்று பொது ஏலம் நடைபெற்றது. நடைபெற்றது. மேற்படி ஏலத்தில் இரண்டு நபர்கள் கலந்து கொண்டு கீழ்க்கண்டுள்ளவாறு ஏலக் கேள்வித் தொகை கோரியுள்ளார்கள்:

வ. எண்.	ஏல இனம்	வரப்பெற்ற ஏலக் கேள்வித் தொகை விவரம்			
		ஏலதாரர் பெயர் திரு./திருமதி.	ஏலக் கேள்வித் தொகை ரூ.	ஏலதாரர் பெயர் திரு. /திருமதி.	ஏலக் கேள்வித் தொகை ரூ.
1.	பேருந்து நிலைய புதிய வணிக வளாக முதல் தளத்தில் அமைந்துள்ள Block A	எஸ். கிருஷ்ணன்	1,01,500-	**பி. சுரேஷ்**	**1,02,000-**

பேருந்து நிலைய புதிய வணிக வளாகத்தில் அமைந்துள்ள பிளாக் ஏ கடைக்கு மூன்றாவது முறையாக 15.02.2019 அன்று நடைபெற்ற ஏலத்தில் திரு. பி. சுரேஷ் என்பவர் மாத வாடகை ரூ.1,02,000-க்கு உச்ச ஏலக் கேள்வித் தொகை கோரியுள்ளார்.

மேற்படி உச்ச ஏலக் கேள்வித் தொகையானது திரு. எஸ். கிருஷ்ணன் என்பவர் கோரியுள்ள ஏலக் கேள்வித் தொகை ரூ.1,01,500-யை விடவும், சென்ற மாத வாடகை மதிப்பு ரூ.97060-யை விடவும் கூடுதலாக உள்ளது. மேற்படி உச்ச ஏலக் கேள்வித் தொகையை அனுமதிக்க மாமன்ற தனி அலுவலரின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :-

இம்மாநகராட்சிக்குட்பட்ட பேருந்து நிலைய வணிக வளாக முதல் தளம் பிளாக் ஏ ஏல இனத்திற்கு 15.02.2019 அன்று மூன்றாவது முறையாக நடைபெற்ற ஏலத்தில் திரு. பி. சுரேஷ் என்பவர் மாத வாடகை ரூ.1,02,000-க்கு கோரியுள்ள உச்ச ஏலக் கேள்வித் தொகை, திரு. எஸ். கிருஷ்ணன் என்பவர் கோரியுள்ள ஏலக் கேள்வித் தொகை ரூ.1,01,500-யை விடவும், சென்ற மாத வாடகை மதிப்பு ரூ.97060-யை விடவும் கூடுதலாக உள்ளதால், திரு. பி. சுரேஷ்

என்பவருக்கு 01.03.2019 முதல் மூன்றாண்டு கொண்ட தொகுப்பு காலத்திற்கு குத்தகை உரிமத்தினை ஒப்படைக்க அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண். அ1/982/2017

239. அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

3. ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட கனிராவுத்தர் குளத்தை தூர் வாரி சுற்றிலும் கரை அமைத்தல், ஏரியின் கரையில் புல் கற்றைகளை வளர்த்து கரைகளை பலப்படுத்துதல், ஏரியை சுற்றி வேலி அமைத்தல், மரக் கன்று நடுதல், நடைபாதை அமைத்தல் மற்றும் இதர பணிகளை ரூ.5.95 கோடி மதிப்பீட்டில் KfW கடன் உதவியுடன் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு மேற்கொள்ள முதன்மைச் செயலர் மற்றும் நிர்வாக இயக்குநர், TNUIFSL, சென்னை அவர்களின் கடிதம் எண்.TNUDF/Projects/Erode/WBIP, நாள்.10.10.2018–ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன் விபரம் கீழ்வருமாறு.

1. **Amount of Loan :** Rs.1.19 Crores (Rupees One Crore and Nineteen Lakhs only)
2. **Project** : Water Body Improvement Project
3. **Project Cost** : Rs.5.95 crores
4. **Rate of Interest** : 8.60% per annum at quarterly rests
5. **Repayment Period** : 7 years with a principal moratorium period of 2 years
6. **Financing Plan** :

Sl. No.	Details	Amount (Rs. in Crores)	%
1	Term Loan from TNUDF under KfW assisted SMIF-TN-II-1 Programme	1.19	20%
2	Capital Grant from PSGF under KfW assisted SMIF-TN-II-1 Programme	4.16	70%
3	ULB Contribution	0.60	10%
	Total	**5.95**	**100%**

7) Completion Period:

The proposed Project should be completed within one year from the date of commencement of project

8) Last date of withdrawal:

Unless TNUIFSL otherwise agrees in writing, the right to make withdrawals from the Loan shall cease on completion of three years from the date of execution of the Loan Agreement

9) Special terms & conditions:

a) Procurement Guidelines:

The Corporation shall adhere to the provisions / guidelines of the Tamil Nadu Transparency in Tenders Act, 1998 for procurement of works, goods and services. The Corporation shall obtain approval for contract packaging, bid documents, bid evaluation reports and other reports & documents as applicable from TNULFSL.

b) ULB Contribution:

The Corporation shall contribute an amount of Rs.60.00 Lakhs (Sixty lakhs only) equivalent to 10.00% of Project Cost as own contribution during the construction period.

c) Operation & Maintenance:

The Corporation shall operate and maintain the Project assets in a good working condition and meet the operation & maintenance charges from its general funds.

d) Loan from others:

The Corporation shall not avail any fresh loans from banks, institutions or any other agency during the tenure of TNUDF's Loan without obtaining prior written approval from TNUIFSL.

e) Environmental & Social:

The Corporation shall implement the Project according to the Environmental, Climate Change and Social Management Framework (ECSMF) prescribed by TNUIFSL.

மேற்கண்ட நிதி ஆதாரங்களின் படியும், நிபந்தனைகளுக்குட்பட்டும், கனிராவுத்தர் குளத்தை தூர் வாரி சுற்றிலும் கரை அமைத்தல், ஏரியின் கரையில் புல் கற்றைகளை வளர்த்து கரைகளை பலப்படுத்துதல், ஏரியை சுற்றி வேலி அமைத்தல், மரக் கன்று நடுதல், நடைபாதை அமைத்தல் மற்றும் இதர பணிகளை ரூ.5.95 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:–

ஒப்புதல் வழங்கலாம். கோப்பு எண்.இ1/0606/2018

240. ஒப்புதல் வழங்ககப்பட்டது.

4. இம்மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கண்ணாடி இழை கம்பி வடம் பதித்தமைக்கான ஆண்டு வாடகை கட்டணம் கீழ்கண்ட **தொலை தொடர்பு** நிறுவனத்தரிடம் கீழ்கண்ட விபரப்படி வசூலிக்கப்பட வேண்டும் என தணிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு.

வ.எண்.	தொலை தொடர்பு நிறுவனம்	நிலுவைத் தொகை ரூ.
1.	ஏர்செல்	4,48,774
2.	ரிலையன்ஸ் இன்பராடெக்	4,25,880
3.	டாடா டெலி சர்வீஸஸ்	3,60,064
4.	டாடா	5,58,432
மொத்தம்		**17,93,150**

மேற்கண்ட **தொலை தொடர்பு** நிறுவனத்தார்கள் நஷ்டம் ஏற்பட்டதால் தமது சேவையினை நிரந்தரமாக முடக்கம் செய்து விட்டதால், மேற்படி நிலுவைத்தொகையினை மாநகராட்சி கேட்பிலிருந்து தள்ளுபடி செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:-

அனுமதி வழங்கலாம். (இ2/5487/2013)

241. அனுமதிக்கப்பட்டது.

5. நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை அவர்களின் கடித ந.க.எண்.13920/2018 ஜே2 நாள்.16.05.2018-ம் தேதிய கடிதத்தில், அரசாணை எண்.(2D) நெ.62 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (ஜே1) துறை, நாள்.11.10.2017-ன்படி மாநகராட்சியில் குறைந்த பட்ச ஊதியம் பெறுவோர் எவரேனும் இருப்பின் அவர்களுக்கு மேற்படி அரசாணையின்படி ஊதியம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈரோடு மாநகராட்சியுடன் ஒருங்கிணைக்கப்பட்ட ஊராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் மூன்றாம் நிலை நகராட்சிகளில் தொகுப்பூதிய, தினக்கூலி அடிப்படையில் பணிபுரிந்து வரும் பணியாளர்களை அரசாணை (நிலை) எண்.121, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.20.12.2012ன்படி ஏற்கனவே அவர்கள் பெற்றுவந்த ஊதியத்தில் எவ்வித மாறுதலுமின்றி ஈர்த்துக்கொள்ளப்பட்டு பணிபுரிந்து வருகிறார்கள். மேற்படி பணியாளர்கள் அரசாணை எண்.(2D) நெ.62 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (ஜே1) துறை, நாள்.11.10.2017-ன்படி குறைந்த பட்ச ஊதியம் நிர்ணயம் செய்து அரசாணை அரசிதழில் வெளியான நாள்.22.11.2017 முதல் அமுல்படுத்திடகோரி விண்ணப்பித்துள்ளார்கள்.

அரசாணையின்படி மேற்படி பணியாளர்களுக்கு ஊதியம் நிர்ணயம் செய்து நிலுவை ஊதியம் வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :-

அவசர அவசியத்தை முன்னிட்டு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி பணியாளர்களுக்கு அரசாணையின்படி ஊதியம் நிர்ணயம் செய்து வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண். 3214/18/சி1

242. அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

6. ஈரோடு மாநகராட்சி மண்டலம்-4 (வார்டு எண்.46)-ல் ஈரோடு கிராமம், ரீ.ச.எண்.956/2 - இல் - 1.88 ஏக்கர் பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு, வரன்முறை வேண்டி மனுதாரர் திரு.எஸ்.ஆனந்த் என்பவர் உறுப்பினர் செயலர் ஈரோடு உள்ளூர் திட்டக் குழுமத்தில் விண்ணப்பிக்கப்பட்டதின் பேரில், அனுமதி எண்.ம.வ.(வரன்முறை) ஈஉதிகு எண். 85/2018 என எண்ணிட்டு கொள்கை அளவிலான (In Principle approval for the layout framework) ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

இந்த அனுமதியற்ற மனைப்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலைகள், மூலை முடக்குகள், பூங்கா மற்றும் பொது இடம் ஆகியவைகளை ஈரோடு இணை சார்பதிவாளர் அலுவலக தான சாசனம் பதிவு எண்.673/2018 பதிவு நாள்.04.02.2019 -ன் மூலம் முறைப்படி ஈரோடு மாநகராட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஒப்படைக்கப்பட்ட சாலைகள் மூலை முடக்குகள், பூங்கா மற்றும் பொது இடங்களை ஈரோடு மாநகராட்சி வசம் எடுத்துக்கொள்ள மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :-

அனுமதி வழங்கலாம். கோப்பு எண். 5194/18/இ1

243. அனுமதிக்கப்பட்டது.

7. ஈரோடு மாநகராட்சி, மண்டலம்-2 க்குட்பட்ட வார்டு எண் :19 பெரியசேமூர் கிராமம் ரீ.ச.எண்கள்: 513/7,8,9,10,11A,11B-யில் 1337.29 சதுர மீட்டர்கள் பரப்பளவு கொண்ட 30 அடி அகல தென்வடல் சாலையினை 1. திரு.C.பெரியசாமி, த/பெ லேட் சின்னப்ப கவுண்டர், 2.திருமதி.கீர்த்தனா, க/பெ ஸ்ரீ சுதன், 3. திரு.பி.பிரசன்னா, த/பெ சி.பெரியசாமி ஆகியோர்களால் ஈரோடு சார்பதிவாளர் அலுவலக தான சாசன கிரைய பத்திரம் பதிவு எண்: 436/2019 நாள்: 13.02.2019-ன் படி இம்மாநகராட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. மேற்படி சாலையானது பெரியவலசு நால் ரோடு முதல் சூளை வரை செல்லும் பிரதான சாலையையும், மாணிக்கம் பாளையம் வீட்டு வசதி வாரியத்தின் முக்கிய சாலை வழியாக சென்று ஈரோடு முதல் நசியனூர் வரை செல்லும் சாலையையும் இணைக்கும் இணைப்பு சாலையாக உள்ளதால், பொதுமக்களின் நலன் கருதியும் போக்குவரத்து நெரிசலை கருத்தில் கொண்டும் மேற்படி சாலையினை இம்மாநகராட்சி வசம் எடுத்துக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:

1) அனுமதி வழங்கலாம். (இ1/305/2019)

244. அனுமதிக்கப்பட்டது.

8. ஈரோடு மேற்கு தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் திரு.கே.வி.இராமலிங்கம் அவர்களின் 14.02.2019-ம் நாளிட்ட கடிதத்தில் ஈரோடு மாநகரில் பெருந்துறை சாலையிலிருந்து டெலிபோன் பவன் வரையிலான புதிய மேம்பாலத்திற்கு மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பெயரில் டாக்டர்.J.J.புரட்சித் தலைவி அம்மா மேம்பாலம் என்று பெயர் வைக்க ஆவன செய்யுமாறு அனுமதி கோரியுள்ளார். புதிய மேம்பாலத்திற்கு மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பெயரில் டாக்டர்.J.J.புரட்சித் தலைவி அம்மா மேம்பாலம் என்று பெயர் வைத்தல் தொடர்பாக நடவடிக்கைகள் ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மூலம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலகக் குறிப்பு:

அனுமதி வழங்கலாம். இ2/626/2019

245. அனுமதிக்கப்பட்டது.

9. ஈரோடு மாநகராட்சி - மண்டலம்-4 - வார்டு எண்.50-க்குட்பட்ட கொல்லம்பாளையம் மாரியம்மன்கோவில் எதிரில் அமைந்துள்ள பராமரிப்பின்றி உள்ள பழைய சிறுவர் பூங்காவை கொல்லம்பாளையம் ஊர் பொதுமக்கள் தங்களது சொந்த செலவில் பராமரித்துக்கொள்ள ஊர் பொதுமக்கள் சார்பாக திரு.எம்.சண்முகசுந்தரம் முன்னாள் காசிபாளையம் நகராட்சி நகர்மன்ற உறுப்பினர் அவர்கள் அனுமதி வழங்குமாறு கோரியுள்ளார்.

ஈரோடு மாநகராட்சி - மண்டலம்-4 - வார்டு எண்.50-க்குட்பட்ட கொல்லம்பாளையம் மாரியம்மன்கோவில் எதிரில் அமைந்துள்ள சிறுவர் பூங்காவை இந்த பகுதி பொதுமக்கள் தாமாகவே முன்வந்து தங்களது சொந்தசெலவில் சீர் செய்து பராமரிக்க சம்மதம் தெரிவித்துள்ளபடியால் கீழ்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு அனுமதி வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

நிபந்தனைகள்:

1. இந்த அனுமதி முற்றிலும் தற்காலிகமானதாகும். மேற்கண்ட சிறுவர் பூங்கா ஈரோடு மாநகராட்சிக்கு தேவைப்படும்போது எந்தவித அறிவிப்பு இன்றி ஈரோடு மாநசராட்சி வசம் எடுத்துக்கொள்ளப்படும்.
2. பூங்கா முற்றிலும் பொதுமக்கள் உபயோகத்திற்கு மட்டும் பயன்படுத்த வேண்டும். இதில் யாரும் உரிமை கோர இயலாது.
3. பூங்காவில் வணிக விளம்பரங்கள் மற்றும் விளம்பர தட்டிகள் வைக்க அனுமதி இல்லை.
4. பூங்காவை பராமரிக்க தேவையான பொருள்கள் மற்றும் ஆட்கள் மனுதாரர் தனது சொந்த செலவில் பயன்படுத்திக்கொள்ளவேண்டும்.
5. பூங்காவில் மதம் சம்மந்தமான எந்த ஒரு நடவடிக்கை மற்றும் கூட்டங்களுக்கும் பயன்படுத்தக்கூடாது.
6. பூங்காவில் எந்த விதமான அசாதாரண நிகழ்வுகள் ஏற்பட்டால் அதற்கு மனுதாரரே முழுபொறுப்பு ஆவார். இதில் ஈரோடு மாநகராட்சி எந்தவிதமான உதவிகளும் செய்ய இயலாது

அலுவலகக் குறிப்பு :-

நிபந்தனைகளுக்குட்பட்டு அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண். 305/18/இ1

246. அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

10. ஈரோடு மாநகரம் ஸ்மார்ட் சிட்டியாக அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் (Smart City Mission: 2017-18), மதிப்பீட்டு தொகை ரூ.14.90 கோடியில் Smart Road Development- Providing Smart road to Periyar Nagar 80 feet road and Periyar Nagar Arch to Arch road in ward no. 44 of Erode City Municipal Corporation சாலைப்பணிகள் மேற்கொள்ளுவதற்கு ந.க.எண்.19884/2018/IHSDP-3-2 நாள்:18.07.2018 அன்று நகராட்சி நிர்வாக இயக்குநர் சேப்பாக்கம் சென்னை–5 அவர்களால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் மேற்கண்ட பணியிணை மேற்கொள்ளுவதற்கு ஆகும் மொத்த செலவினம் ரூ.14.90 கோடியில், மத்திய அரசு பங்கு: ரூ.7.45 கோடிகள், தமிழக அரசு பங்கு: ரூ.7.45 கோடிகள் என மேற்கொள்வதற்கு அனுமதி பெறப்பட்டுள்ளது. மேலும் மேற்கண்ட பணிக்கு தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.25477/2017/DO1, நாள்: 04.09.2018-ல் ரூ.1400.00 இலட்சத்திற்கு தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கு E-Tendering முறையில் இரு உறை அமைப்பில் 26.10.2018 அன்று ரூ.1400.00 இலட்சத்திற்கான ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டதில், கீழ்கண்டவாறு நான்கு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

1) Thiru.K.M.Ramasamy,
2) M/s. Myans Infrastructure,
3) Thiru.M.S.Veerappan,
4) Thiru.R.Prakasam,

மேற்கண்டவாறு வரப்பெற்ற நான்கு ஒப்பந்தப்புள்ளிகளையும் 29.10.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழுக் கூட்டத்தில் கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் தகுதி வாய்ந்த ஒப்பந்தப்புள்ளிகளுக்கான விலைப்புள்ளிகளை 01.11.2018-அன்று மதியம் 4.00 மணிக்கு திறக்கப்பட்டதில், பெறப்பட்ட விலைவிகிதங்களை அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டு விலைவிகிதத்துடன் ஒப்புநோக்கும்போது பெறப்பட்ட விபரம் கீழ்க்கண்டவாறு

1	Thiru.K.M.Ramasamy	(+) 19.50 சதவீதம் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட அதிகம்

2	Thiru.M.S.Veerappan	(+) 21.00 சதவீதம் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட அதிகம்
3	M/s. Myans Infrastructure	(+) 23.00 சதவீதம் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட அதிகம்

வரப்பெற்ற தகுதிவாய்ந்த மூன்று ஒப்பந்ததாரர்களும் மதிப்பீட்டுத் தொகைக்கு 1 சதவீதம் டேவணித்தொகை வழங்கியுள்ளார்கள். பெறப்பட்ட தகுதிவாய்ந்த மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாகவும், அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகையை விட (+)19.50 சதவீதம் அதிகமானதாகவும் உள்ள Thiru.K.M.Ramasamy அவர்களை, மேலும் விலையைக் குறைத்துக் கொடுக்க, இவ்வலுவலக கடிதம் எண்.இ1/444/2018-1-ன்படி கேட்க அறிவிப்பு 02.11.2018 அன்று கொடுக்கப்பட்டது. ஒப்பந்ததாரர் தனது 09.11.2018 தேதிய கடிதத்தில் இனம் எண்கள்-1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 11, 12, 13, 14, 15, 16, 17, 18, 19, 20, 21, 22, 23, 24, 25, 26, 27.01, 27.02, 27.03, 27.04, 28, 29.01, 29.02, 30.01, 30.02, 31.01, 31.02, 32, 33, 34, 36, 37, 38, 39, 41, 42, 43, 44, 45, 46, 47, 48, 49, 50, 51, 52, 53, 54, 55, 56, 57, 58, 59 மற்றும் 61-ல் ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளியில் கொடுத்துள்ள விலையை விட குறைத்து கொடுத்துள்ளார். அவ்வாறு குறைத்து கொடுத்த விலையைக் கொண்டு அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டு விலை விகிதத்துடன் ஒப்புநோக்கும் பொழுது அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (+) 4.98 % அதிகமான விலை விகிதம் உள்ளது. எனவே பணியின் அவசர அவசியம் கருதி வரப்பெற்றுள்ள தகுதிவாய்ந்த மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாகவும் மற்றும் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டினை விட அதிகமான **(+) 4.98%** சதவீதத்தில் கோரியுள்ள **Thiru.K.M.Ramasamy** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1) மேற்படி திட்டப்பணிக்கு முதன் முறையாக வரப்பெற்ற தகுதிவாய்ந்த மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாகவும் மற்றும் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகையை விட (+) 4.98 % அதிகமான விலை விகிதம் உள்ள மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியை ஏற்பதற்கு பொறியர் கையேடு பக்கம் 9, பத்தி எண். 2.7.2. ஆகியவற்றில் குறிப்பிட்டுள்ளபடி மாமன்றத்திற்கு வழங்கப்பட்ட அதிகார வரம்பிற்குட்பட்டுள்ளது. ஏனவே இப்பணியின் அவசர அவசியம் கருதி, **Thiru.K.M.Ramasamy** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்பதற்கு தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று , பணி உத்திரவு வழங்க நடவடிக்கை எடுத்தமைக்கு ஒப்புதல் வழங்கலாம்.

கோப்பு எண் : E1/444/2018-1

247. அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

11. ஈரோடு மாநகரம் ஸ்மார்ட் சிட்டியாக அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் (Smart City Mission: 2017-18), மதிப்பீட்டு தொகை ரூ.14.00 கோடியில் Smart Road Development- Providing Smart road to Periyar Nagar Chidambaram colony road in ward no. 44 and Old Poonthurai road in ward no.45 of Erode City Municipal Corporation சாலைப்பணிகள் மேற்கொள்ளுவதற்கு ந.க.எண்.19884/2018/IHSDP-3-4 நாள்: 18.07.2018 அன்று நகராட்சி நிர்வாக இயக்குநர் சேப்பாக்கம் சென்னை–5 அவர்களால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
மேலும் மேற்கண்ட பணியிணை மேற்கொள்ளுவதற்கு ஆகும் மொத்த செலவினம் ரூ.14.00 கோடியில், மத்திய அரசு பங்கு: ரூ.7.00 கோடிகள், தமிழக அரசு பங்கு: ரூ.7.00 கோடிகள் என மேற்கொள்வதற்கு அனுமதி பெறப்பட்டுள்ளது.

மேலும் மேற்கண்ட பணிக்கு தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.25477/2017/DO1, நாள்: 04.09.2018-ல் ரூ.1350.00 இலட்சத்திற்கு தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கு E-Tendering முறையில் இரு உறை அமைப்பில் 26.10.2018 அன்று ரூ.1350.00 இலட்சத்திற்கான ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டதில், கீழ்கண்டவாறு மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

1. M/s. Myans Infrastructure,
2. Thiru. K.M.Ramasamy,
3. M/s. Kousic and Co,

மேற்கண்டவாறு வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளையும் 29.10.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழுக் கூட்டத்தில் கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் தகுதி வாய்ந்த ஒப்பந்தப்புள்ளிகளுக்கான விலைப்புள்ளிகளை 01.11.2018-அன்று மதியம் 4.00 மணிக்கு திறக்கப்பட்டதில், பெறப்பட்ட விலைவிகிதங்களை அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டு விலைவிகிதத்துடன் ஒப்புநோக்கும்போது பெறப்பட்ட விபரம் கீழ்க்கண்டவாறு

1	M/s. Myans Infrastructure	(+) 19.38 சதவீதம் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட அதிகம்
2	Thiru.K.M.Ramasamy	(+) 20.93 சதவீதம் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட அதிகம்
3	M/s. Kousic and Co	(+) 21.65 சதவீதம் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட அதிகம்

வரப்பெற்ற தகுதிவாய்ந்த மூன்று ஒப்பந்ததாரர்களும் மதிப்பீட்டுத் தொகைக்கு 1 சதவீதம் டேவணித்தொகை வழங்கியுள்ளார்கள். பெறப்பட்ட மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாகவும், அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகையை விட (+) 19.38 சதவீதம் அதிகமானதாகவும் உள்ள M/s. Myans Infrastructure நிறுவனத்தினர் அவர்களை, மேலும் விலையைக் குறைத்துக் கொடுக்க, இவ்வலுவலக கடிதம் எண்.இ1/444/2018-2 -ன்படி கேட்க அறிவிப்பு 02.11.2018 அன்று கொடுக்கப்பட்டது. ஒப்பந்ததாரர் தனது 09.11.2018 தேதிய கடிதத்தில் இனம் எண்கள்-1, 3, 5, 6, 7, 8, 9, 10, 11, 12, 13, 14, 15, 16, 24.01, 24.02, 25, 28.01, 28.02, 29, 32, 33, 34, 38, 39, 40, 41 மற்றும் 45-ல் ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளியில் கொடுத்துள்ள விலையை விட குறைத்து கொடுத்துள்ளார்கள். அவ்வாறு குறைத்து கொடுத்த விலையைக் கொண்டு அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டு விலை விகிதத்துடன் ஒப்புநோக்கும் பொழுது அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (+) 4.95 % அதிகமான விலை விகிதம் உள்ளது. எனவே பணியின் அவசர அவசியம் கருதி வரப்பெற்றுள்ள தகுதிவாய்ந்த மூன்று

ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாகவும் மற்றும் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டினை விட அதிகமான **(+) 4.95 %** சதவீதத்தில் கோரியுள்ள **M/s. Myans Infrastructure** நிறுவனத்தினர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1) மேற்படி திட்டப்பணிக்கு முதன் முறையாக வரப்பெற்ற தகுதிவாய்ந்த மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாகவும் மற்றும் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகையை விட (+) 4.95 % அதிகமான விலை விகிதம் உள்ள மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியை ஏற்பதற்கு பொறியர் கையேடு பக்கம் 9, பத்தி எண். 2.7.2. ஆகியவற்றில் குறிப்பிட்டுள்ளபடி மாமன்றத்திற்கு வழங்கப்பட்ட அதிகார வரம்பிற்குட்பட்டுள்ளது. இப்பணியின் அவசர அவசியம் கருதி, **M/s. Myans Infrastructure** நிறுவனத்தினர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்பதற்கு தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று , பணி உத்திரவு வழங்க நடவடிக்கை எடுத்தமைக்கு ஒப்புதல் வழங்கலாம்.

கோப்பு எண் : E1/444/2018-2

248. அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

12. ஈரோடு மாநகரம் ஸ்மார்ட் சிட்டியாக அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் (Smart City Mission: 2017-18), மதிப்பீட்டு தொகை ரூ.12.40 கோடியில் Smart Road Development- Providing Smart road to Kalaimagal school road in ward no. 43 and Jeevanantham road in ward no. 52 of Erode City Municipal Corporation சாலைப்பணிகள் மேற்கொள்ளுவதற்கு ந.க.எண்.19884/2018/IHSDP-3-3 நாள்: 18.07.2018 அன்று நகராட்சி நிர்வாக இயக்குநர் சேப்பாக்கம் சென்னை–5 அவர்களால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் மேற்கண்ட பணியிணை மேற்கொள்ளுவதற்கு ஆகும் மொத்த செலவினம் ரூ.12.40 கோடியில், மத்திய அரசு பங்கு: ரூ.6.20 கோடிகள், தமிழக அரசு பங்கு: ரூ.6.20 கோடிகள் என மேற்கொள்வதற்கு அனுமதி பெறப்பட்டுள்ளது. மேலும் மேற்கண்ட பணிக்கு தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.25477/2017/DO1, நாள்: 04.09.2018-ல் ரூ.1200.00 இலட்சத்திற்கு தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கு E-Tendering முறையில் இரு உறை அமைப்பில் 26.10.2018 அன்று ரூ.1200.00 இலட்சத்திற்கான ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டதில், கீழ்கண்டவாறு மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

1. M/s. RPP Infra Projects Limited,
2. M/s. P and C Projects Private Limited,
3. M/s. TETRAD Projects,

மேற்கண்டவாறு வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளையும் 29.10.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழுக் கூட்டத்தில் கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் தகுதி வாய்ந்த ஒப்பந்தப்புள்ளிகளுக்கான விலைப்புள்ளிகளை 01.11.2018-அன்று மதியம் 4.00 மணிக்கு திறக்கப்பட்டதில், பெறப்பட்ட விலைவிகிதங்களை அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டு விலைவிகிதத்துடன் ஒப்புநோக்கும்போது பெறப்பட்ட விபரம் கீழ்க்கண்டவாறு

1	M/s. TETRAD Projects	(+) 18.94 சதவீதம் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட அதிகம்
2	M/s. P and C Projects Private Limited	(+) 23.66 சதவீதம் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட அதிகம்
3	M/s. RPP Infra Projects Limited	(+) 26.27 சதவீதம் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட அதிகம்

